OS: 68/2018

Date: 14.03.2022

பெயர் : குணசேகரன்

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை - 1ம் பிரதிவாதி தரப்பில்**

தாவா சொத்து எனது பாத்தியம் என விளம்புகை பரிகாரம் கோரியுள்ளேன். தாவா சொத்து கிரயம் பெற்ற வகையில் எனக்கு பாத்தியம். பொதுவாக ஒருசொத்தை கிரயம்ரகயம் பெறும்போது அநத் சொத்து யாருக்கு என்ன வகையில் பாத்தியம் என்பவதை விசாரித்துதான் கிரயம் பெற வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும். அவ்வாறு விசாரித்துதான் நான் தாவா சொத்தை கிரயம் பெற்றேன். அவ்வாறு கிரயம் பெறுவதற்கு முன்பு தாவா சொத்த யாருக்கு பாத்தியம் என நான் வில்லங்கம் பார்த்து தெரிந்துகொண்டேன். முதலவிசாரணையில் சொல்லியுள்ள ஆவணங்கள் நீங்கலாக வேறு ஆவணங்கள் இல்லை. தாவாவில் வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தை நான் உரிமை இல்லாத நபரிடம் இருந்த கிரயம் பெற்றேன் என்றால் சரியல்ல. உண்மையில் தாவா சொத்தை பற்றி விசாரித்திருந்தால் எனக்கு கிரயம் கொடுத்தவர்களுக்கு தாவா சொத்தில் உரிமை இல்லை என்ற விவரம் தெரிந்திருக்கும் என்றும், நான் உரிமை இல்லாத நபரிடம் இருநத கிரயம் பெற்றுள்ளதால் எனது கிரயம் சட்டப்படியானது அல்ல என்றால் சரியல்ல. எனக்கு விற்பனை செய்தவருக்கு தாவா சொத்தில் உரிமை இல்லை என தெரிய வந்ததாலதான் வில்லங்க சான்றிதழை முன்னிலைப்படுத்தவில்லை என்றால் சரியல்ல.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒப்பம்/PW1

ஒப்பம்/ திரு.அஷ்பக் அகமது,
சார்பு நீதிபதி, ஓமலூர்.